

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.5.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் 25வது பொதுக்குழுக் கூட்டம் மற்றும் பொன்விழா மாநாட்டில் தொ.மு.ச.பொன்விழா மலரை வெளியிட்டார். உடன் கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளரும்,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, கழக துணை பொதுச் செயலாளரும். உயர்கல்வித் துறை அமைச்சருமான முனைவர் க. பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் .பி.கே. சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மு. சண்முகம், பொருளாளர் கி.நடராசன் மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (18.5.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் 25வது பொதுக்குழுக் கூட்டம் மற்றும் பொன்விழா மாநாட்டில் தொ.மு.ச.சார்பில் கழக நிதியாக 5 கோடி ரூபாய்க்கான காசோலையை தொ.மு.ச.பேரவையின் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. வழங்கினார். உடன் கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளரும்,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு. கழக துணை பொதுச் செயலாளரும். உயர்கல்வித் துறை அமைச்சருமான முனைவர் க. பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொ.மு.ச. பொருளாளர் கி.நடராசன் மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.5.2023) தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக் கப்பட்டுள்ள அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெ. ஆனி மேரி ஸ்வர்ணா, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஐ.எஸ். மெர்சி ரம்யா, நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.உமா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பி.விஷ்ணு சந்திரன் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டி.கிறிஸ்துராஜ், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுங்கரா, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.என்.பூங்கொடி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கே.எம்.சரயு ஆகியோருடன் உரையாடினார். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.5.2023) தலைமைச் செயலகத்தில், மணிப்பூர் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சேகர், துணைச் செயலாளர் பார்த்திபன் ஆகியோர் சந்தித்து, மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின்போது, அங்கு வசித்து வரும் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி ஜெசிந்தா லாசரஸ் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.5.2023) தலைமைச் செயலகத்தில், புதுடில்லி, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 2–வது தேசிய அளவிலான CPFSI தடகள போட்டியில் கலந்துகொண்டு வெள்ளிப் பதக்கங்கள் வென்ற செல்வி அமலா (100 மீட்டர் தடகளப் போட்டி), கோபாலகிருஷ்ணன் (குண்டு எறிதல்), விஷ்ணு தேவ் (நீளம் தாண்டுதல்) மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வென்ற செல்வி காயத்ரி (100 மீட்டர் தடகளப் போட்டி) பாண்டியராஜன் (1500 மீட்டர் தடகளப் போட்டி), பச்சையப்பன் (குண்டு எறிதல்), ஹரிகிருஷ்ணா (குண்டு எறிதல்), செந்தில்குமார் (குண்டு எறிதல்) ஆகிய பெருமூளை வாதம் தொடர்புடைய நரம்பியல் பாதிப்புகள் உள்ள மாற்றுத் திறனாளிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் ஜெசிந்தா லாசரஸ், தமிழ்நாடு பெருமூளை வாதம் விளையாட்டு சங்கம் (Cerebral Palsy Sports Association, Tamilnadu) தலைவர்கள் திருமதி எஸ்.உமாராணி, எஸ்.கே.பரணிதரன், பொதுச் செயலாளர் கே.ஆர். சித்தேஸ்வரன் ஆகியோர் உள்ளனர்.

### தமிழரின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு அனுமதி!

# அலங்காநல்லூர் புதிய மைதானத்தில் பொங்கலன்று வெற்றி விழா!

## உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு!

சென்னை, மே 19 -

தமிழர்தம் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்தத் தடையில்லை என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்திருப்பது தமிழ்நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கது எனவும் இந்த வெற்றி விழாவை அலங்காநல்லூரில் பொங்கல் திருநாளில் கொண்டாடுவோம் எனவும் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்ப தாவது:-

**தமிழர்தம் வீரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்தத் தடையில்லை என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்திருப்பது தமிழ்நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்கது!**

**தமிழ்நாடு அரசு கொண்டு வந்த அவசரச் சட்டம் செல்லும் என்பதை நிலைநாட்ட அரசு நடத்திய சட்டப் போராட்டத்துக்கு மகத்தான வெற்றி கிடைத்துள்ளது. அலங்காநல்லூரில் மாபெரும் ஜல்லிக்கட்டு மைதானத்தை நாம் கட்டி வருகிறோம். வரும் சனவரி மாதம் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில் ஜல்லிக்கட்டு வெற்றி விழாவைக் கொண்டாடுவோம்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

### திருமழிசை, காக்களூர் - அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில்

# ரூ.110.81 கோடியில் திட்டப் பணிகள்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் ஆய்வு!

சென்னை, மே 19-

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (18.05.2023) தமிழ்நாடு சிட்கோவால்திருவள்ளூவர் மாவட்டம், திருமழிசை, காக்களூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய தொழிற்பேட்டைகளில் ரூ.110.81 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட பணிகளை ஆய்வு செய்தார்.

**காக்களூர் தொழிற்பேட்டை**

காக்களூர் தொழிற்பேட்டையில், 475 தொழில் நிறுவனங்கள் பயன் பெறும் வகையில் ரூ.2.72 கோடி மதிப்பில், நாள் ஒன்றுக்கு 8 லட்சம் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஆய்வு செய்து தொழிற்பேட்டையின் கழிவுகளால் சுற்றுசூழல் பாதிப்பு ஏற்படாதவகையில் கழிவு நிர் சுத்திகரிப்பு நிலையத்தை முறையாக செயல்படுத்தி, பராமரிப்பு செய்திட வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். மேலும், தொழில் முனைவோர்களுக்கு உதவிடும் வகையில் 9,000 சதுர அடி பரப்பளவில் ரூ.2.92 கோடி மதிப்பில் கட்டப்பட்ட பொது உற்பத்தி மையக் கட்டிடத்தினையும் ஆய்வு செய்தார். அதில் 4,500 சதுர அடியில் அமைந்துள்ள சேமிப்புக் கிடங்கிற்கான வாடகையினை விரைந்து நிர்ணயித்து தொழில்முனைவோருக்கு ஒதுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். காக்களூர் தொழிற்பேட்டையில் ரூ8.34 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை பணிகள், தெரு விளக்குகள், உயர் கோபுர மின் விளக்குகள், கழிவுநீர் குழாய் ஆகிய பராமரிப்பு பணிகளை பார்வையிட்டார்.

மேலும் மத்திய மின் பொருள் சோதனைக் கூடத்தில் ரூ.8.27 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட எல்.இ.டி விளக்குகள் சோதனைக்கூடம், தீ பரவாமல் தடுக்கும் மின்சார கேபிள் சோதனைக்கூடம் ஆகியவற்றை ஆய்வு செய்தார். இதற்கு முன் திருமழிசை தொழிற்பேட்டையில் ரூ.6.81 கோடி மதிப்பீல் மேற்கொள்ளப்பட்டு வரும் பராமரிப்பு பணிகளையும் பார்வையிட்டார்.

**அம்பத்தூர், திருமழிசை தொழிற்பேட்டைகள்**

அதனைத் தொடர்ந்து, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.60.55 கோடி மதிப்பீட்டில் 1.31 லட்சம் சதுர அடியில் 112 தொழிற் கூடங்களுடன் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி தொழில் வளாகத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் மின் தூக்கிகள், கனரக வாகனங்கள் இடையூறு இல்லாமல் வந்து செல்லும் வகையில் சாலைப் பணிகள், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவற்றை நல்ல முறையில் அமைக்க வேண்டும் எனவும், கட்டிடத்தின் தரத்தினை ஒவ்வொரு நிலையிலும் பொறியாளர்கள் உறுதி செய்து திட்டத்தை வரும் செப்டம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மேலும், 1.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.29.47 கோடி மதிப்பில் 5 தளங்களுடன் 810 தொழிலாளர்கள் தங்கும் வகையில் கட்டப்பட்டு வரும் தொழிலாளர் தங்கும் விடுதியினை ஆய்வு மேற்கொண்டு கட்டிடப் பணிகளை காலதாமதம் இன்றி நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார். மேலும் சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் 9 பயனாளிகளுக்கு ரூ.5.40 கோடி மானியத்துடன் கூடிய கடன் உதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர், அருண்ராய், தொழில் வணிக ஆணையர் திருமதி. சிஜி தாமஸ், தொழில் வணிக கூடுதல் ஆணையர் திருமதி. கிரேஸ் பச்சாவ், சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி. மதுமதி, தொழில் வணிக கூடுதல் இயக்குநர் ஏகாம்பரம், சிட்கோ பொறியாளர்கள், தொழிற்பேட்டை கிளை மேலாளர்கள் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - 21 ஆம் தேதி

# தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம்!

# [தேதி மாற்றம்]

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம் வருகிற 21.5.2023 - ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

அதுபோது உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்: 18-05-2023

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்
தி.மு.க.